بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 22/08/2025 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## ஹுனைன் போரின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் அம்சங்கள்

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு தொடர்பாக போர்கள் அல்லது யுத்தங்கள் பற்றி கூறப்பட்டு வந்தது. இது தொடர்பாகவே இன்று ஹுனைன் போர் பற்றியும் சற்று கூறுவேன். இந்தப் போர் ஹிஜ்ரீ 8 ஆம் ஆண்டு ஷவ்வால் மாதத்தில், மக்காவிலிருந்து ஏறத்தாழ 26 கி.மீ தொலைவில், மக்காவுக்கும் தாயிஃபுக்கும் நடுவில் இருக்கின்ற ஹுனைன் என்ற இடத்தில் நடைபெற்றது. இந்தப் போரில் கலந்து கொண்டிருந்த பெரிய கோத்திரம் ஹவாஸின் கோத்திரம் ஆகும். எனவே, இது ஹவாஸின் போர் என்றும் கூறப்படுகிறது. சிலர் இதை அவ்தாஸ் போர் என்றும் கூறியுள்ளார்கள். ஏனென்றால், எதிரிப்படையின் ஒரு பகுதி ஹுனைனிலிருந்து ஓடிச் சென்று அவ்தாஸ் எனப்படும் ஊருக்குள் சென்று விட்டது. முஸ்லிம்கள் அங்கு சென்றடைந்து எதிரியைத் தோற்கடித்தார்கள். எனவே, சிலர் இந்தப் பெயரை வழங்கியுள்ளார்கள். ஆனால், பெரும்பாலான எழுத்தாளர்களோ அவ்தாஸ் போர் பற்றி தனியாகக் கூறியுள்ளார்கள்.

ஹுனைன் போர் பற்றித் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

لَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ فِیۡ مَوَاطِنَ کَثِیۡرَۃٍ ۙ وَّ یَوۡمَ حُنَیۡنٍ ۙ اِذۡ اَعۡجَبَتۡکُمۡ کَثۡرَتُکُمۡ فَلَمۡ تُغۡنِ عَنۡکُمۡ شَیۡئًا وَّ ضَاقَتۡ عَلَیۡکُمُ الۡاَرۡضُ بِمَا

رَحُبَتۡ ثُمَّ وَلَّیۡتُمۡ مُّدۡبِرِیۡنَ ﴿۲۵﴾ ثُمَّ اَنۡزَلَ اللّٰہُ سَکِیۡنَتَہٗ عَلٰی رَسُوۡلِہٖ وَ عَلَی الۡمُؤۡمِنِیۡنَ وَ اَنۡزَلَ جُنُوۡدًا لَّمۡ تَرَوۡہَا وَ عَذَّبَ الَّذِیۡنَ

کَفَرُوۡا ؕ وَ ذٰلِکَ جَزَآءُ الۡکٰفِرِیۡنَ ﴿۲۶﴾ ثُمَّ یَتُوۡبُ اللّٰہُ مِنۡۢ بَعۡدِ ذٰلِکَ عَلٰی مَنۡ یَّشَآءُ ؕ وَ اللّٰہُ غَفُوۡرٌ رَّحِیۡمٌ ﴿۲۷﴾

பொருள்: “நிச்சயமாக, அல்லாஹ் உங்களுக்குப் பல மைதானங்களில் உதவி புரிந்துள்ளான். குறிப்பாக, ஹுனைன் போர் அன்று. அப்போது உங்களின் பெரும்பான்மை உங்களைப் பெருமை கொள்ள வைத்து விட்டது. மேலும், அது உங்களுக்கு எவ்வகையிலும் உதவ முடியவில்லை. மேலும், பூமி விரிவானதாக இருந்தும், அது உங்களுக்குக் குறுகியிருந்தது. பின்னர் நீங்கள் புறமுதுகு காட்டித் திரும்பி விட்டீர்கள்.

பின்னர் அல்லாஹ் தன் தூதருக்கும் நம்பிக்கை கொண்டவர்களுக்கும் தனது அமைதியினை இறக்கினான். மேலும், நீங்கள் காணமுடியாத படைகளை இறக்கினான். அது நிராகரித்தவர்களுக்குத் தண்டனை அளித்தது. மேலும், நிராகரிப்பவர்களுக்கு இத்தகைய கூலியே கிடைக்கிறது. அதற்குப் பிறகும் அல்லாஹ், தான் நாடியவரின் தவ்பாவை ஏற்றுக் கொண்டவாறு அவர் பக்கம் திரும்புவான். மேலும், அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மேன்மேலும் கருணை காட்டுபவனும் ஆவான்."

இது நடந்ததற்கான காரணம், மக்கா வெற்றிகாணப்பட்டதும், அப்பொழுது வரை அரேபியாவின் பெரிய பெரிய கோத்திரங்கள் ஒன்று இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தன. அல்லது மாநபி (ஸல்) அவர்களுக்குக் கட்டுப்படுவதன் கீழ் வந்து விட்டன. ஆனால், மக்காவுக்கு அருகிலேயே வாழ்ந்து வந்த பனூ ஹவாஸின் மற்றும் பனூ ஃஃசகீஃஃப் (ثقيف) ஆகியவை பெரிதும் கிளர்ச்சி செய்யக்கூடிய மற்றும் போர் புரியக்கூடிய கோத்திரங்களாக இருந்தன. அவை கட்டுப்பட மறுத்தது மட்டுமின்றி, அவற்றின் தலைவர்கள் ஒன்றுகூடி, 'முஹம்மத் {(ஸல்) அவர்கள்} மக்காவோடு சேர்த்து அரேபியாவின் கோத்திரங்களை தமக்குக் கட்டுப்படுபவர்களாக, கீழ்ப்படிபவர்களாக ஆக்கிக் கொண்டார்கள். இப்பொழுது அவர்கள் நிச்சயமாக நம்மை நோக்கி வருவார்கள். எனவே, அவர்கள் நம் பக்கம் வருவதற்கு முன் நாமே அவர்கள் மீது தாக்குதல் தொடுத்து விடுவதே சிறந்ததாக இருக்கும்' என்று கூறினார்கள். 'முஹம்மத் {(ஸல்)} அவர்கள் இதுவரை போரிடத் தெரியாதவர்களோடு மோதியிருக்கிறார்கள். நம்முடைன் இதுவரை அவர்கள் மோதவில்லை' என்றும் கூறினார்கள். பனூ ஹவாஸினுடன் ஃஃசகீஃஃப், நஸ்ர் மற்றும் சஷ்ம் ஆகிய கோத்திரங்களின் போர் வீரர்கள் அனைவரும் ஒன்று கூடி விட்டார்கள். சஅது பின் பக்ர் மற்றும் பனூ ஹிலால் ஆகிய கோத்திரங்களிலிருந்து சில மக்கள் ஒன்று கூடினார்கள்.

உண்மையில், பனூ ஹவாஸின் இதற்கு மிகவும் முன்னதாகவே முஸ்லிம்களோடு போர் புரிவதற்கான ஆயத்தத்தைத் துவங்கியிருந்தார்கள் என்பது சில அறிவிப்புகளில் இருந்து தெரியவருகிறது. ஏனென்றால், ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் மெது மெதுவாக யூதர்கள் உட்பட மற்ற கோத்திரங்களைத் தமக்குக் கீழாக்கிக் கொண்டே செல்கிறார்கள் என்பதை அவர்கள் பார்த்தார்கள். அப்பொழுது சிலைவணக்கம் முடிவுக்கு வந்து விடப் போகிறது; முஹம்மத் (ஸல்) அவர்கள் தம் தோழர்களுடன் சேர்ந்து எல்லார் மீதும் மேலோங்கி விடப் போகிறார்கள் என்ற கவலை அவர்களுக்கு ஏற்பட்டது. எனவே, அவர்களது வழியைத் தடுத்து நிறுத்த வேண்டியது அவசியம் என எண்ணினார்கள். எனவே, இதற்காக அவர்கள் ஆயத்தம் மேற்கொள்ளத் துவங்கி விட்டார்கள். மேலும், உர்வா பின் மஸ்ஊதின் தலைமையில் ஒரு படைக்குழுவை உர்துனின் நகரமான ஜுர்ஷுக்கு,

அங்கிருந்து ஆயுதங்கள், போர்த்தளவாடங்கள் போன்றவற்றைக் கொண்டு வருவதற்காக அனுப்பினார்கள்.

பனூ ஹவாஸினின் இந்த ஆயத்தங்கள் பற்றி எப்படித் தெரிய வந்தது என்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவை வெற்றி கொள்வதற்காக மதீனாவிலிருந்து மக்காவை நோக்கி புறப்பட எண்ணியபோது, பெருமானார் (ஸல்) அவர்கள் முன்னணிப் படையாக சில மக்களைப் படைக்கு முன்னால் அனுப்பி வைத்து விட்டார்கள். இந்த முன்னணிப் படை ஹவாஸின் கோத்திரத்தின் ஒரு மனிதனை சிறைபிடித்து விட்டது. அவன் ஓர் உளவாளியாக இருந்தான். ஹவாஸின் சார்பாக முஸ்லிம்கள் மீது ஒரு கண் வைப்பதற்காக சுற்றிக் கொண்டிருந்தான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவனிடம் கேட்டபோது, நன்றாக விசாரித்தபோது அவன், 'ஹவாஸின் கோத்திரத்தினர் பற்பல படைகளை ஒன்று திரட்டியுள்ளனர். பனூ ஃசகீஃபையும் தம்முடன் இணைத்துக் கொண்டனர். பெரிய ஆயுதங்களையும் போர்த்தளவாடங்களையும் கொண்டு வருவதற்காக ஜுர்ஷை நோக்கி குழுவை அனுப்பியுள்ளனர்' என்று கூறினான்.

ஹவாஸின் கோத்திரத்தினர் இந்த ஆயத்தங்களை செய்து கொண்டிருக்கையிலேயே, மக்கா எந்த ஒரு குறிப்பான தங்குதடையுமின்றி எளிமையாக வெற்றி காணப்பட்டது. அதன் காரணமாக ஹவாஸின் கோத்திரத்தினர் தங்களது ஆற்றல் மீதான ஆணவத்தால், நாமே முஹம்மத் {(ஸல்)} அவர்கள் மற்றும் அவர்களுடைய தோழர்களுடன் போர் புரிய செல்லலாம் என்று தீர்மானித்தனர். மேலும், நம்மால்தான் முஸ்லிம்களைத் தோற்கடித்து அவர்களை வேரறுக்க முடியும் என்பது அவர்களது கற்பனையாக இருந்தது. அந்த எல்லாக் கோத்திரங்களும் ஹவாஸின் கோத்திரத்தின் தலைவனான 30 வயது இளைஞன் மாலிக் பின் அவ்ஃபைத் தம்முடைய படைத்தளபதியாகவும் தலைவனாகவும் ஆக்கின. மேலும், 20,000 பேர் கொண்ட படை ஆயத்தமாகி ஹுனைனை நோக்கி முன்னேறத் துவங்கியது.

ஹவாஸின் கோத்திரத்தின் தலைவன் மாலிக் பின் அவ்ஃப் அந்தப் போருக்கு ஆயத்தம் செய்வதற்காக, அரேபியாவின் வரலாற்றில் அதற்கு முன் எவரும் செய்திருக்க வாய்ப்பில்லாத அத்தகைய ஓர் அடியை எடுத்து வைத்தான். அது என்னவென்றால், படைத்தளபதி ஒவ்வொரு கோத்திரத்தின் ஒவ்வொரு நபருக்கும் போருக்காக வீட்டிலிருந்து தனியாக புறப்படக்கூடாது; மாறாக, தன் மனைவி மக்கள், தன்னுடைய பொருள்கள், கால்நடைகள் முதற்கொண்டு அனைத்தையும் உடன் எடுத்துக் கொண்டு புறப்பட வேண்டும் என்று கட்டளையிட்டான். அதன் மூலம் அவனுடைய படையின் ஒவ்வொரு போர் வீரரும் உயிரைப் பணயம் வைத்து வீரமாகப் போர் புரிய வேண்டும் என்பது அவனது நோக்கமாக இருந்தது.

இந்தப் போரில் பனூ சஷ்மைச் சேர்ந்த ஒரு வயதான தலைவர் துரைத் பின் சிம்மஹ் போரில் இருந்து தடுத்தது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. மாலிக் பின் அவ்ஃபுடன் சேர்ந்து மக்கள் தம்முடைய செல்வங்கள், தம் மனைவிமார்கள் மற்றும் மகன்கள் ஆகியோரை உடன் அழைத்துக் கொண்டு அவ்தாஸ் எனும் ஊரை அடைந்து முகாம் அமைத்து விட்டார்கள். அப்பொழுது வயது முதிர்ந்த துரைத் பின் சிம்மஹ் மாலிக் பின் அவ்ஃப் நுட்பமானது எனக் கருதிய செயலை எதிர்த்தவாறு இவ்வாறு கூறினார்: 'உனக்குப் போர் செய்யத் தெரியவில்லை. ஹவாஸின் கோத்திரமே! இறைவன் மீது ஆணையாக! இந்தக் கருத்து சரியானதல்ல. இந்த மனிதன் உங்களுடைய பெண்களை அவமானப்பட வைத்து விடுவான். மேலும், இவன் உங்களை எதிரியிடம் ஒப்படைத்து விட்டு, தான் ஃசகீஃபின் கோட்டைகளுக்குள் சென்று ஒளிந்து கொள்வான். எனவே, நீங்கள் திரும்பிச் சென்று விடுங்கள். இவனை விட்டு விடுங்கள்.'

இவ்வாறு இவர் போர் புரியாமல் இருக்குமாறு ஆலோசனை வழங்கினார்.

இதனால் மாலிக் தனது வாளை உருவி, 'ஹவாஸின் கோத்திரத்தினரே! இறைவன் மீது ஆணையாக! நீங்கள் எனக்குக் கட்டுப்பட வேண்டும். இல்லையென்றால், நான் எனது முழு சுமையையும் இந்த வாளின்மீது போட்டு இதை எனது நெஞ்சில் இறக்கி விடுவேன். (அதாவது, தற்கொலை செய்து கொள்வேன்)' என்று கூறினான். ஹவாஸின் கோத்திரத்தினர் தங்களுக்குள் கலந்து ஆலோசித்தனர். மேலும், 'இறைவன் மீது ஆணையாக! நாம் மாலிக்குக் கட்டுப்படவில்லை என்றால், அவன் தற்கொலை செய்து கொள்வான். ஆனால், அவனோ இளைஞன் ஆவான். பிறகு, நாம் துரைதுடன் இருந்து விடுவோம். அவன் கிழவன் ஆவான். அவனுடன் சேர்ந்து போர் புரிய முடியாது. நீங்கள் மாலிக்குடன் கருத்தொருமித்து விடுங்கள்' என்று கூறினர்.

ஆக, இதுவே நடந்தது. மாலிக் துரைதிடம், 'இது இல்லாமல் வேறு எந்த ஆலோசனையும்கூட இருக்கிறதா?' என்று கேட்டான். அதற்கு துரைத் கொடுத்த ஆலோசனைக்கு இசைந்தவாறு மாலிக் தன்னுடன் இருந்தவர்களிடம், அவர்கள் புதர்களிலும் பள்ளத்தாக்குகளின் பக்கமும் சென்று ஒளிந்து கொள்ளுமாறும், இஸ்லாமிய படையைத் தோற்கடிக்கும் பொருட்டு முதல் தாக்குதலையே ஒரேயடியாக செய்து விடுமாறும் கூறினான்.

பெருமானார் (ஸல்) அவர்களுக்கு பனூ ஹவாஸினின் ஆயத்தம் பற்றிய செய்தி கிடைத்ததும், பெருமானார் (ஸல்) அவர்கள் ஹவாஸின் கோத்திரங்களின் படையின் நிலைமைகளை ஆய்வு செய்து வருவதற்காக ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீ ஹத்ரத் (ரலி) அவர்களை அனுப்பினார்கள். அவர்கள் இந்த ஹவாஸின் மக்களின் படைக்குள் நுழைந்து விட்டார்கள். மேலும், அவர்களுக்கு இடையே சுற்றித் திரிந்து எல்லாவிதமான தகவல்களையும் சேகரித்தார்கள். அவர்கள் ஓரிரு நாள்கள் அவர்களிடம் தங்கியிருந்தார்கள். பிறகு, பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து,

அன்னாருக்கு அனைத்தையும் தெரிவித்தார்கள். மாநபி (ஸல்) அவர்கள் நிர்பந்தத்திற்கு ஆளாகி எதிர்த்துப் போரிட ஆயத்தங்கள் மேற்கொண்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ ஹவாஸினுடன் போரிடுவதற்காக மக்காவிலிருந்து புறப்படுவதற்கு முன் ஆய்வு செய்தபோது, எதிர்ப்பார்க்கப்படும் போரைப் பொறுத்தவரை இஸ்லாமிய படையிடம் போர்த்தளவாடங்கள் மிகக் குறைவாகவே இருந்தன. அந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்காக பெருமானார் (ஸல்) அவர்கள் அப்பொழுது வரை முஷ்ரிக் ஆகவே இருந்து வந்த மக்காவின் செல்வந்தரான தலைவர், சஃப்வான் பின் உமய்யாவிடம் சில ஆயுதங்களைக் கடனாகக் கேட்டார்கள். இவ்வாறே பெருமானார் (ஸல்) அவர்கள் தம் சச்சா வழி சகோதரர் நவ்ஃபல் பின் ஹாரிஸிடமும் 3000 ஈட்டிகளைக் கடனாக வாங்கினார்கள். மேலும், “நான் உன்னுடைய இந்த ஈட்டிகள் எதிரியின் முதுகில் பதிவதைக் காண்கிறேன்.” என்று கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் இந்தக் கூற்றில், எதிரிகள் தோல்வியைத் தழுவி ஓடுவர்; மேலும், பெரிய உயிரிழப்பை எதிர்கொள்வர் என்ற முன்னறிவிப்பு இருந்தது. இவ்வாறே இப்னு அபீ ரபீஆவிடமிருந்தும் சில ஆயுதங்களைக் கடனாக வாங்கினார்கள்.

கண்ணியத்திற்குரிய நபி பெருமானார் (ஸல்) அவர்களின் மேலான உயர் நல்லொழுக்கத்தின் வெளிப்பாடு கவனிக்கத் தக்கதாகும்! பெருமானார் (ஸல்) அவர்கள் மக்காவை வெற்றி கண்டிருந்தார்கள். இப்பொழுது இது ஒரு வெற்றி கொள்ளப்பட்ட சமுதாயமாக இருந்தது. மேலும், போர் வழிமுறை மற்றும் வழக்கப்படி வெற்றி பெற்றவரே வெற்றி கொள்ளப்பட்ட சமுதாயத்தின் செல்வங்களின் உரிமையாளராக இருப்பார். ஆனால், இப்பொழுது போருக்காக ஆயுதங்களுக்கான தேவை ஏற்பட்டபோது, ஒவ்வொரு ஆயுதமும் கடனாக வாங்கப்பட்டது. மேலும், நாங்கள் எத்தனை ஆயுதங்களை வாங்குகிறோமோ அத்தனையே திருப்பித் தருவோம் என்று வாக்குறுதி அளித்து வாங்கினார்கள். இவ்வாறே அபூஜஹ்லின் ஒன்று விட்ட சகோதரரான அப்துல்லாஹ் பின் அபீ ரபீஆவிடமிருந்து நபி பெருமானார் (ஸல்) அவர்கள் 30, 40 ஆயிரம் திர்ஹம்கள் கடனாக வாங்கினார்கள். இவர் மக்கா வெற்றி அன்று முஸ்லிம் ஆகியிருந்தார் என்று அறிவிப்பில் உள்ளது.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் இது தொடர்பாக விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறினார்கள்:* மாநபி (ஸல்) அவர்கள் பல்வேறு தேவைகளுக்காக இந்தத் தொகையைக் கடனாக வாங்கியிருக்கலாம். அதில் பொருளுதவி மற்றும் இழப்பீட்டுத் தொகைகளை செலுத்தியது ஆகியவையும் அடங்கும். அல்லாஹ்வே நன்கறிவான். வல்லாஹு அஃலம். (அல்லாஹ் எல்லாரையும்விட நன்கறிபவன் ஆவான்) இதன் மேலும் விவரங்களை இனி எடுத்துரைப்பேன். இன் ஷா அல்லாஹ்.

*இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* தொழுகைக்குப் பிறகு நான் இருவருக்கு ஜனாஸா காயிப் தொழுகையும் தொழ

வைப்பேன். ஒன்று, **மதிப்பிற்குரிய காஜா முக்தார் அஹ்மத் சாஹிப் பட்** அவர்களுடையதாகும். இவர்கள் சியால்கோட்டின் காஜா அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்களின் மகனாவார்கள். தலைமையக அளவில் இவர்கள் Fazle Umar Foundation இன் Director ஆகவும், பல ஆண்டுகள் ரப்வாவின் தாருல் கஸாவில் காஸியாகவும் தொண்டாற்றி வந்தார்கள். கஸாவில் இவர்களுடன் நானும் சில காலம் பணி புரிந்தேன். நல்ல கருத்து கூறும் நபராக இருந்தார்கள். மிகவும் பணிவுள்ள மனிதராக இருந்தார்கள். கிலாஃபத்துடன் இவர்களது தொடர்போ எப்பொழுதும் இருந்து வந்தது. பிற்காலத்திலோ என்னுடனும் நல்ல தொடர்பு இருந்தது. 2002 இல் இவர்கள் கனடாவுக்கு இடம் மாறிச் சென்று விட்டார்கள். அங்கு Regional அமீராக தொண்டாற்றி வந்தார்கள்.

இரண்டாவது, ஜனாஸா குறிப்பு இந்தியாவின் நஸீர் அஹ்மத் சாஹிப் அவர்களின் துணைவியார் **சயீதா பேகம் சாஹிபா** அவர்களுடையதாகும். இவர்களும் கடந்த நாள்களில் 75 வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். அல்லாஹ்வின் அருளால் மூஸீயாவாக இருந்தார்கள். பின்விட்டுச் சென்றவர்களில், கணவர் மட்டுமின்றி, 3 மகள்கள் மற்றும் 4 மகன்கள் இருக்கிறார்கள். இவர்கள் காதியானின் நாயிப் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் தாஹிர் அஹ்மத் தாரிக் சாஹிப் அவர்களின் தாயார் ஆவார்கள். தாஹிர் அஹ்மத் சாஹிப் ஜமாஅத் பிரதிநிதியாக இங்கு இங்கிலாந்துக்கு வந்திருந்தார்கள். அங்கு இவர்களின் தாயார் வஃபாத் ஆகி விட்டார்கள். எனவே, இவர்களால் அவர்களின் ஜனாஸாவில் கலந்து கொள்ள முடியவில்லை. இதுவும் தொண்டாற்றும் குடும்பம் ஆகும்.

மர்ஹூமாவின் சிறிய மகன் ஷப்பீர் அஹ்மத் சாஹிப் அவர்களும் இயக்கத்தின் முஅல்லிம் ஆவார்கள். இவ்வாறே இவர்களின் மகளும் இயக்கத்தின் முபல்லிக் ஜப்பார் சாஹிப் அவர்களின் துணைவியார் ஆவார்கள். மற்ற இரண்டு மகன்களும்கூட ஜமாஅத்துக்குத் தொண்டு செய்யக்கூடியவர்கள் ஆவார்கள். பெரும் தொண்டாற்றும் குடும்பம் ஆகும். இவர்களின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் காஸீ முஹம்மத் அக்பர் ப(ஹ)ட்டீ சாஹிப் (ரலி) அவர்கள் மூலமாக வந்தது. பெரும் மார்க்கப் பற்றுள்ளவராகவும், தொழுகை மற்றும் நோன்பைக் கடைபிடிப்பவராகவும் இருந்தார்கள்.

اَلْحَمْدُ لِلّٰہِ ! اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَنْ یَّھْدِہِ اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّآ اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہُ اِنَّ اللّٰہَ یَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**